தேர்ச்சி – இரண்டு :– கிறிஸ்துக்குள் புதுவாழ்வு வழங்கும் அருளடையாளங்களைப் பெறுவர்

11

## 2.3. மக்களைப் புனிதப்படுத்தும் குருத்துவம்



ஏதேன் தோட்டத்தைப் பண் படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்.
(தொ.நூ. 2:15)

- **மேற்கூறிய திருவிவிலியப் பகுதிலிருந்து நீர் என்ன விளங்குகின்றீர்**

நாம் காணும் அழகிய உலகம் இறைவனின் படைப்பாகும். அது பாதுகாத்து விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதே அவரது விருப்பம் ஆகும். இன்று உலகிலே பலர் விவசாயிகளாக, வியாபாரிகளாக, சாரதிகளாக, கட்டிட நிபுணர்களாக, வைத்தியர்களாக, ஆசிரியர்களாக.... வேலை செய்து தம் பணிகளில் ஈடுபடுவதால் இன்றும் இறைதிட்டம் அவர் விருப்பப்படி நிறைவேறுவதை நாம் காண முடிகிறது. இவை இறை அழைப்பாக இருந்தாலும், இவற்றுக்கெல்லாம் மேலான ஓர் ஆன்மீக அழைப்பாக குருத்துவப் பணிக்கென்றும் இறைவன் சிலரைத் தேர்ந்தெடுப்பதை நாம் காணலாம்.

பழைய ஏற்பாட்டிலும் இறைவன் தம் பணிக்காக சிலரைத் தேர்ந்தெடுத்து ''அருட்பொழிவு'' செய்துள்ளார்.

**ஆண்டவர் சாமுவேலிடம், "தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்" என்றார். உடனே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார். (1சாமு. 16:12-13)**

பழைய ஏற்பாட்டில் அரசர்கள் எண்ணெயினால் அபிஷேகம் செய்யப்பட்டார்கள். இயேசுக்கிறிஸ்துவும் உலகுக்கெல்லாம் அரசரும் குருவுமாகையால் அபிஷேகம் செய்யப்பட்டார். எனவேதான், அவர் மெசியா என்று அழைக்கப்பட்டார்.

**மெசியா ⟶ அபிஷேகம் செய்யப்பட்டவர் என்பதாகும்.**

இயேசு பிறப்பின்போதே மெசியாவாகப் பிறந்தார். அவர் யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றபொழுது இறைவன் அவரை விசேடவிதமாக தெரிந்தெடுத்தாரென வெளிப்படுத்தினார். இது அபிஷேகம் செய்யும் ஒரு நிகழ்வாகும்.



இதேபோல, இறைவனால் விசேட அழைத்தலைப் பெறுகின்றவர்களும் குருத்துவச் சடங்கிலே ஆயரினால் விசேடமாக "அருட்பொழிவு" செய்யப்படுகின்றனர். அழைப்புப் பெற்றவரது தலைமீது ஆயர் தமது கைகளை வைத்து செபிப்பதன் வழியாக குருத்துவ அருட்பொழிவு வழங்கப்படுகின்றது.

குருக்கள் கிறிஸ்துவுடன் ஒன்றித்து இறை அரசுக்காகத் தம்மை அர்ப்பணித்து பணி செய்கிறார்கள். இதற்காகத் திருமுழுக்கு அழைப்பை ஆழமாக வாழ்ந்து நம்பிக்கை, எதிர்நோக்கு, இறையன்புக்குச் சாட்சி பகர்கின்றனர்.

இறைத்தந்தையினால் அருட்பொழிவு செய்யப்பட்ட இவர்கள் உலகிற்கு அனுப்பப்படுகின்றனர். இவர்கள் தமது குருத்துவப் பணிக்குச் சான்றுபகர்ந்து பிறரது மீட்பிற்காகவும் இறையரசின் வளர்ச்சிக்காகவும் தம்மால் இயன்ற பணியைச் செய்கின்றார்கள்.

**உதாரணம் : கல்விப்பணி, சமூகப்பணி**

**குருத்துவத்தின் வகைகள்:**

1. பொதுக்குருத்துவம்
2. பணிக்குருத்துவம்

### பொதுக்குருத்துவம்:

திருமுழுக்கு வழியாக கிறிஸ்வில் புதுவாழ்வு பெற்ற அனைவரும் குருத்துவத்தில் பங்குகொள்வதற்காகப் பெற்றுக்கொள்ளும் அழைப்பாகும்.

### பணிக்குருத்துவம்:

இறுதி இராவுணவின் போது இயேசு பணிக்குருத்துவத்தை ஏற்படுத்தினார். இப்பணியை உலகில் தொடர்ந்து ஆற்றுவதற்காக திருத்தூதர்களை இயேசு தேர்ந்தெடுத்தார். இக்குருத்துவப் பணியை நிறைவேற்றுவதே பணிக்குருத்துவமாகும்.

## குருவானவரின் கடமைகள்:

- தம் வாழ்வை இறைவனின் பெயரால் மக்களுக்காக அர்ப்பணிப்பவர்கள்.
- இறை−மனித உறவைக் கட்டியெழுப்புபவர்கள்.

- உயிர்த்த கிறிஸ்துவைச் சந்திக்க வழிநடத்துபவர்கள்.
- அப்பம் பிட்கும் சடங்கில் தலைமை வகிப்பவர்கள்.
- பங்கு திருச்சபையுடன் இணைந்திருப்பவர்கள்.
- பொதுநலனுக்காகத் தன்னை அர்ப்பணிப்பவர்கள்.
- மனித சமுதாயத்துக்கு மீட்பைப் பெற்றுக்கொடுக்க உழைப்பவர்கள்.
- நல்ல ஆயனாக செயற்படுபவர்கள்.

### சுருக்கமான விடை தருக.

1. "மெசியா" என்ற சொல்லுக்குப் பொருள் யாது?
2. இயேசு எப்போது அபிஷேகம் செய்யப்பட்டார்?
3. குருத்துவத்தின் வகைகள் எவை?
4. இயேசு பணிக்குருத்துவத்தை எப்போது ஏற்படுத்தினார்?
5. உமது பங்குக் குருவுக்கு நீர் செய்யக்கூடிய உதவிகள் மூன்று எழுதுக.

### செயற்பாடு:

- பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.

  (சாமுவேல், தாவீது, மனிதன், ஆயர், குருக்கள், ஆபிராம்)

1. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ இந்த உலகத்தைப் பாதுகாத்து விருத்தி செய்யும் பொறுப்பை உடையவனாக இறைவனால் படைக்கப்பட்டான்.
2. இறையரசுக்காகப் பணியாற்ற _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ அழைப்புப் பெற்றுள்ளனர்.
3. பழைய ஏற்பாட்டில் இறைவனால் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ அருட்பொழிவு செய்யப்பட்டார்.
4. குருத்துவ திருநிலைப்படுத்தலை வழங்குபவர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ ஆவார்.
5. தாவீதை அபிஷேகம் செய்தவர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ ஆவார்.

### குழு ஆய்வு:

1. மத்தேயு 10:1-4 பகுதியை வாசித்து இயேசு தேர்ந்தெடுத்த சீடர்களின் பெயர்களையும் அவர்களுக்கு அளித்த அதிகாரங்களையும் பட்டியல்படுத்துக.
2. லூக்கா 10:1-12 இயேசு பணிசெய்ய தம் சீடர்களை இருவர் இருவராக அனுப்பியபோது கூறிய வார்த்தைகளை அட்டவணைப்படுத்துக.